## 5.7 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை 2000 – 2001 ஆண்டுக்கு நீட்டித்தல்

சமூக நலம் (ம) சத்துணவு திட்ட (சந–3) துறை

அரசாணை (நிலை) எண்.129 நாள் : 04.08.2000

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.292 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை நாள்.4.12.96
2. அரசாணை (நிலை) எண்.329, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை நாள்.17.11.97
3. அரசாணை (நிலை) எண்.239, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை நாள்.05.10.98
4. அரசாணை (நிலை) எண்.176, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை நாள்.29.9.99

மேலும் படிக்க :

5. தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கடித எண்.3816/இ1/2000 நாள்.04.05.2000 மற்றும் 11.07.2000

**ஆணை**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் தமிழ்நாட்டில் ரூ.1440 கோடி செலவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்தை (பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம்) செயல்படுத்தவும், முதல் கட்டமாக ரூ.2.40 கோடி செலவில் 14 மாவட்டங்களில் 1996–97ஆம் ஆண்டில் செயல்படுத்திட ஆணைகள் வெளியிடப்பட்டன. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்கண்ட திட்டம் ரூ.11.594 கோடி செலவில் 1997–98ம் நிதியாண்டில் நீட்டிக்க ஆணைகள் வெளியிடப்பட்டன. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மேலும் 7 மாவட்டங்களுக்கு இத்திட்டத்தை ரூ.12 கோடி செலவில் 1998–99ம் நிதியாண்டில் நீட்டித்து ஆணையிடப்பட்டது. பார்வை 4ல் படிக்கப்பட்ட அரசாணையின் வாயிலாக (சென்னை நீங்கலாக) 28 மாவட்டங்களிலும் மேற்கண்ட திட்டத்தை ரூ.12 கோடி செலவில் 1999–2000ஆம் நிதியாண்டில் நீட்டித்து ஆணை வழங்கப்பட்டது.

2. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர் படிக்கப்பட்ட கடிதங்களில் 2000–2001ஆம் ஆண்டில் மேற்கண்ட திட்டத்தை (சென்னை நீங்கலாக) 28 மாவட்டங்களிலும் நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.12 கோடி செலவில் தொடர்ந்து செயல்படுத்திடவும் 1999–2000ம் ஆண்டில் மேற்கண்ட திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட ரூ.12 கோடியில் மீதமுள்ள ரூ.7 கோடியை 2000–2001ம் ஆண்டிற்கான திட்ட செயல்பாட்டிற்காக பயன்படுத்திடவும் ஒப்பளிப்பு ஆணைகள் வேண்டியுள்ளார்.

3. மேற்படி கருத்துருவை அரசு கவனமாக ஆராய்ந்து கீழ்கண்ட ஆணைகளை வெளியிடுகிறது:–

(அ) 1999–2000ஆம் நிதியாண்டில் ஒப்பளிக்கப்பட்ட ரூ.12 கோடியில் (ரூபாய் பன்னிரெண்டு கோடி) எஞ்சியுள்ள ரூ.7 கோடியை (ரூபாய் ஏழு கோடி) 2000–2001ம் ஆண்டில் இத்திட்டத்திற்கு செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

(ஆ) 2000–2001ம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள ரூ.12 கோடியை (ரூபாய் பன்னிரெண்டு கோடி) பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம் 28 மாவட்டங்களிலும் (சென்னை நீங்கலாக) தொடர்ந்து செயல்படுத்திட ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

4. மேலே பத்தி 3–ல் வெளியிடப்பட்ட ஆணைகளை கீழ்கண்ட நடைமுறைகளின் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் செயல்படுத்திட வேண்டுமென்றும் அரசு ஆணையிடுகிறது:–

1) 2000–2001ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தம் ரூ.12 கோடி (ரூபாய் பன்னிரெண்டு கோடி) காலாண்டு அடிப்படையில் ஒவ்வொரு காலாண்டிற்கும் விடுவிக்கப்படும். இத்தொகை தொடர்புடைய, தன் வைப்பு நிதியில் (P.D. Account) வரவு வைக்கப்படும்.

2) தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் தற்போது இருப்பில் உள்ள ரூ.7.00 கோடியை (ரூபாய் ஏழு கோடி) செலவு செய்த பின்னர்தான் பொது வைப்பு நிதியில் உள்ள தொகையில் தேவைப்படும் தொகையை விடுவிக்க கோரி ஒவ்வொரு காலாண்டிற்கும் அரசின் நிதித் துறையை (வழி வகைகள்) (Ways and Means) அணுக வேண்டும்.

3) தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் தன் வைப்பு நிதியிலிருந்து (P.D. Account) தொகை விடுவிக்க வேண்டும்போது, நிதித் (வழிவகைகள்) துறை, செலவினத்தின் நிலைக்கேற்ப (trend of the expenditure) தொகையை விடுவிக்கும்.

5. மேலே பத்தி 3(ஆ)வில் ஒப்பளிக்கப்பட்டுள்ள ரூ.12 கோடியை (ரூபாய் பனிரெண்டு கோடி) மேலே பத்தி 4—ல் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின் நிபந்தனைகளின் அடிப்படையில் தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு காலாண்டு அடிப்படையில் பெற்று வழங்கிட சமூக நல ஆணையர், சென்னை—5 கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. மேற்கண்ட செலவினம், கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

> "2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் — 02 சமூக நலன் — 103 மகளிர் நலன் — ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் — II மாநிலத் திட்டம் — LC தமிழ்நாடு மகளிர் முன்னேற்றத் திட்டம் (மகளிர் திட்டம்) — 11 உதவித் தொகைகள்.02 — பொதுவான உதவித் தொகை (கு.தொ.கு.2235 02 103 LC 1123)

7. மேற்படி தொகை பணமாக வழங்கப்படக்கூடாது. இத்தொகை கீழ்க்கண்ட தன்வைப்பு நிதிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

> "K — வைப்புத் தொகைகளும் மற்றும் முன்பணங்களும். (a) வட்டியில்லாத வைப்புத் தொகைகள் — 8443—00 பொது வைப்புத் தொகைகள் 800 — இதர வைப்புத் தொகைகள். AE — அரசு கம்பெனிகள், கழகங்கள் ஏனையவற்றின் வைப்புத் தொகைகள் 28 — தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக வைப்புத் தொகை". (கு.தொ.கு.8443—00—800—AE- 280 D)

8. இவ்வாணை நிதித்துறையின் 02—08—2000 நாளிட்ட 512/SS(GV)/SW/2000 அரசு எண்ணில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஷீலா பாலகிருஷ்ணன்**
அரசு செயலாளர்